New Method History of India

IN TAMIL FOR STANDARD IV

[Prepared according to the Elementary School Syllabus 1939]

BY

R. SUBBIAH, M. A.



G. GOPAUL PILLAI
PAKULAM: TRICHINOPOLY

Price As.

புதுமுறை இந்துதேச சரித்திரம்

நான்காம் வகுப்பிற்குரியது

T-UN-681

[1939-ல் வெளியிடப்பட்டுள்ள ஆரம்பப் பாடசாலைகளின் பாடதிட்டத்தை அனுசரித்து எழுதப்பட்டுள்ளது.]

ஆசிரியர் :

R. சுப்பையா, M. A.,

சரித்திர விரிவுரையாளர்,

ஹோலி கிராஸ் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

E. Raju IV Class ~~Nationalism~~ private School

T. G. கோபால் பிள்ளை

தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] 1947 [விலை அணு 6

First Edition 1939.
Reprinted 1940, May 1941, September 1941.
Second Edition (Revised) October 1942.
Reprinted July 1943, April 1944, 1945, 1946, 1947.

Approved by the Madras Text-Book Committee for Class use:
(Vide Fort St. George Gazette Supplement to Part I B,
dated 27-4-1943, Part I Page 4 and Part II. Page 16.)

Printed at the Rajan Electric Press, Madras.
For Q. H. M. S. 60—April 1947—4000 Copies.

முகவுரை

இந்திய மக்கள் எல்லோரும் இந்தியசரித்திரத்தைப் படிப்பது அவசியமென்றும், அவ்வாறு படிப்பதால் அதிகப் பயன் அடையலாம் என்றும் சொல்லாமலே விளங்கும். மற்றப் பாடங்களைப்போலச் சரித்திரப் பாடத்தையும் இளமைப் பருவத்திலேயே கற்கவேண்டும். ஆகையால், நமது துரைத்தனத்தார் சிறுவர்களுக்கு இந்திய சரித்திரத்தை ஒரு பாடமாக ஏற்படுத்தி, அதற்கு வேண்டிய பாட திட்டத்தையும் 1939ல் புதிதாகத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அப் பாட திட்டத்தை அனுசரித்து இப் புதுமுறை இந்து தேச சரித்திரம் என்னும் புத்தகம் நான்காம் வகுப்பிற்கு ஏற்றவாறு எழுதப் பெற்றிருக்கிறது.

இப்புத்தகத்தில் பொதுவாகத் தென்னிந்தியாவிலும், சிறப்பாகத் தமிழ் நாட்டிலும் இருக்கும் சரித்திரப் பெருமை வாய்ந்த நகரங்களின் சரித்திரங்களை அறியச் செய்தல் ஒரு முக்கியமான அம்சமாக அமைந்திருக்கிறது.

ஆகையால், இப்புத்தகத்தில் அத்தகைய சரித்திரங்களும், விசுவநாத நாயக்கர், முதல் குலோத்துங்கன், சேரன் செங்குட்டுவன் முதலியவர்களுடைய சரித்திரங்களும் தெளிவாக எழுதப்பெற்றிருக்கின்றன. மாணவர்கள் இப்புத்தகத்தைப் படித்துப் பயனடைவார்கள் என்று நம்புகிறேன்.

கல்வித்துறையைப் பேணும் அரசியலாரும், கல்வியபிமானிகளும், கல்விச்சாலை ஆசிரியர்களும் அன்புகூர்ந்து, இப்புத்தகத்தைத் தங்கள் பள்ளிக்கூடங்களில் பாட புத்தகமாக வைக்கும்படியாக வேண்டுகின்றேன்.

இங்ஙனம்:

R. சுப்பையா, M. A.

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	நமது தேசம்	...	1
2.	அலெக்சாந்தரும் புருஷோத்தமரும்	...	3
3.	அசோகர்	...	6
4.	கி. மு—கி. பி.	...	10
5.	விக்கிரமாதித்தர்	...	12
6.	ஹர்ஷ வர்த்தனர்	...	14
7.	முகம்மது நபி	...	17
8.	பல்லவர்கள்	...	21
9.	இராஜபுத்திரர்	...	24
10.	முஸ்லிம் படையெடுப்பு	...	26
11.	கிருஷ்ண தேவராயர்	...	29
12.	அக்பர்	...	32
13.	ஷாஜஹானும் தாஜ்மஹாலும்	...	35
14.	ராபர்ட் கிளைவ்	...	37
15.	விக்டோரியா மகாராணியார்	...	42
16.	சென்னப்பட்டணம்	...	44
17.	செஞ்சிக்கோட்டை	...	46
18.	சேரன்—செங்குட்டுவன்	...	49
19.	முதல் குலோத்துங்கன்	...	51
20.	விசுவநாத நாயக்கர்	...	53

புதுமுறை இந்துதேச சரித்திரம்

நான்காம் வகுப்பிற்குரியது

1. நமது தேசம்

நாம் வசிக்கும் இத்தேசத்திற்கு **இந்தியா** என்று பெயர். இத்தேசம் ஆசியா கண்டத்தின் தென்பாகத்தில் அமைந்திருக்கிறது. இது ஒரு பெரிய தேசம். இதில் 36 கோடி ஜனங்கள் வசிக்கிறார்கள்.

இந்தியாவின் வடக்கே **இமயமலை** என்று ஒரு மலை இருக்கிறது. இது உலகத்தில் உள்ள மலைகள் எல்லாவற்றிலும் பெரியது. இதன் நீளம் 1600 மைல்; அகலம் சுமார் 200 மைல். இது ஏறக்குறைய 20 ஆயிரம் அடி உயரமுள்ளது. 5 மைல் உயரத்திற்கு மேற்பட்ட பல சிகரங்கள் இதில் இருக்கின்றன. இந்தியாவிற்குத் தெற்கில் இந்து மகா சமுத்திரமும், கிழக்கில் வங்காளக் குடாக் கடலும், மேற்கில் அராபிக் கடலும் எல்லைகளாக இருக்கின்றன.

இமயமலை வடக்கில், ஒரு பெரிய சுவர்போல இருந்து, அந்தப் பக்கத்திலிருந்து நமது நாட்டின் மேல் ஒருவரும் படையெடுத்து வராதபடி தடுக்கின்றது. ஆயினும் அதன் மேற்கிலும், கிழக்கிலும் சில கணவாய்கள் இருக்கின்றன

இவற்றுள் மேற்கிலுள்ள **கைபர், போலன்** கணவாய்கள் முக்கியமானவை.

இந்தியாவின் மத்தியில் கிழக்கு மேற்காக **விந்தியமலை** என்ற ஒரு மலை அமைந்திருக்கிறது. அது இந்தியாவை ஏறக்குறைய இரண்டு சம பாகங்களாகப் பிரிக்கிறது. அந்த மலைக்கு வடக்கிழக்கிலுள்ள பிரிவுக்கு **இந்துஸ்தானம்** என்று பெயர். தெற்கிலுள்ள பிரிவு **தக்ஷிணம்** அல்லது **தக்காணம்** எனப்படும்.

இந்துஸ்தானம் மிகவும் செழிப்பான பிரதேசம். இதில் **கங்கை, சிந்து, பிரம்மபுத்திரா** என்னும் மூன்று பெரிய நதிகள் பாய்கின்றன. தக்ஷிணம் அல்லது தக்காணம் என்பதற்குத் தெற்குப் பிரதேசம் என்று பொருள். இதிலும் கோதாவரி, கிருஷ்ணை, காவிரி, நர்மதை, தபதி முதலிய நதிகள் பாய்கின்றன. அதனால் இதிலும் செழிப்பு மிகுந்த இடங்கள் உண்டு. தக்காணம் இந்துஸ்தானத்தைவிட உஷ்ணம் மிகுந்த பிரதேசம்.

நமது தேசமாகிய இந்தியா மிகப் பழைய காலம் முதலே நாகரிகம் வாய்ந்தது; மிகவும் சிறப்புடன் விளங்குவது. இதன் செழிப்பைக்கண்டு இதற்கு வட மேற்கிலிருந்து பல ஜாதியார்கள் கைபர், போலன் கணவாய்களின் வழியாக இங்கே வந்து குடியேறினர்.

அந்நிய நாட்டினர் இதன்மீது படையெடுத்து வந்ததற்கும் இதன் செழிப்பே காரணமாகும்.

இப்படிப்பட்ட நமது நாட்டின் சரித்திரத்தை அறிந்துகொள்ள வேண்டியது நமது முக்கிய கடமை அல்லவா? பின்வரும் பாடங்களினுல் நாம் நமது தேசத்தின் சரித்திரத்தை அறிந்து கொள்ளலாம்.

கேள்விகள்

1. நமது தேசத்தின் பெயர் என்ன? அது எங்கே இருக்கிறது?
2. இமயமலையைப் பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல்லு.
3. இந்துஸ்தானம் என்பது எது? தக்காணம் என்பது எது?
4. நமது நாட்டின்மீது அங்கியர் படையெடுக்கக் காரணம் என்ன?

---

2. அலெக்சாந்தரும் புருஷோத்தமரும்

ஐரோப்பா கண்டத்தின் தென் கிழக்கில் **கிரீஸ்** என்று ஒரு தேசம் இருக்கிறது. அந் நாட்டு ஜனங்களுக்குக் **கிரேக்கர்** என்று பெயர். ஐரோப்பாவில் அந்தத் தேசமே முதன்முதல் நாகரிகம் பெற்று விளங்கியது.

பண்டைக் காலத்தில் கிரீஸ் தேசம் பல சிறு இராஜ்யங்களாகப் பிரிந்து இருந்தது. அந்த இராஜ்யங்களுள் **மாஸிடோனியா** என்பது ஒன்று. சுமார் 2500 வருஷங்களுக்கு முன் மாஸிடோனியாவை **அலெக்சாந்தர்** என்னும் அரசர் ஆண்டு வந்தார். உலகப் பிரசித்தி பெற்ற வீரர்களில் அவர் ஒருவர்.

அலெக்சாந்தர் உலகிலுள்ள நாடுகளையெல்லாம் வென்று தாம் சக்கரவர்த்தியாக வேண்டும் என்று விரும்பினர். அவ்வாறே அவர் பாரசீகம், எகிப்து, ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளின் மீது படையெடுத்துச் சென்று அவற்றைக் கைப்பற்றினர். பிறகு அவர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார்.

அலெக்சாந்தர்

அலெக்சாந்தர் இந்தியாவின் மீது படை யெடுத்து வந்த காலத்தில், இந்தியாவில் பல சிறு இராஜ்யங்கள் இருந்தன. பல அரசர்கள் அவற்றை ஆண்டு வந்தார்கள். அவற்றுள் இந்துஸ்தானத்தில் ஆண்டுகொண்டிருந்த அரசர்களுள் ஒருவராகிய **போரஸ்** அல்லது **புருஷோத்தமர்** என்பவர், தம்மைப்போன்ற இரண்டொரு அரசர்களைத் தம்முடன் சேர்த்துக்கொண்டு அலெக்சாந்தரை எதிர்க்கலானர்.

சிந்து நதியின் உபநதிகளில் ஒன்றான **ஜீலம் நதிக்** கரையில் இருவரும் எதிர்த்து நின்றனர். அந்நதியின் மேற்குக் கரையில் அலெக்சாந்தரும்

கிழக்குக் கரையில் புருஷோத்தமரும் தங்கியிருந்தார்கள். நதியில் வெள்ளம் பெருகிப் போய்க்கொண்டிருந்தது. நதியைக் கடந்து சென்று அக்கரையிலிருந்த புருஷோத்தமருடைய சேனையுடன் போர் செய்வதெப்படி என்று அலெக்சாந்தர் நீண்ட நேரம் ஆலோசித்தார். முடிவில் ஒரு தந்திரம் செய்தார்.

அலெக்சாந்தர் தம் சேனையின் ஒரு பாகத்தைத் தாம் தங்கியிருந்த இடத்திற்குத் தெற்கே கொஞ்ச தூரம் நடத்திச் சென்று இராத்திரியில் ஒருவரும் அறியாமல் அங்கே நதியைக் கடக்கச் செய்தார். ஆனால் புருஷோத்தமர் இதை எப்படியோ தெரிந்துகொண்டு, தமது மகன் வசம் ஒரு சேனையை அனுப்பி, அதை எதிர்க்கச் சொன்னார். புருஷோத்தமரது மகன் அவ்விடம் போய்ச் சேருமுன், அலெக்சாந்தரது சேனை ஆற்றைக் கடந்துவிட்டது. இருவருக்கும் ஏற்பட்ட யுத்தத்தில் அலெக்சாந்தர் ஜெயித்தார். பிறகு அவர் புருஷோத்தமர் சேனை தங்கியிருந்த இடத்தை அடைந்து அவருடன் போர் புரிந்தார். அச்சமயத்தில் அலெக்சாந்தருடைய சேனையின் மற்றப் பாகமும் நேராக ஆற்றைக் கடந்து உதவிக்கு வந்து சேர்ந்தது. புருஷோத்தமர் தீரமாகப் போர் புரிந்தார். ஆனாலும் அவர் தோற்றுப் போனார். அலெக்சாந்தர் புருஷோத்தமரைச் சிறைபிடித்தார்.

இவ்வாறு வெற்றி பெற்ற அலெக்சாந்தர் புருஷோத்தமருடைய வீரத்திற்கு மெச்சி, அவரு

டைய நாட்டை அவருக்கே திருப்பிக்கொடுத்து அவருடன் சிநேகம் செய்துகொண்டார். பிறகு மேலும் பல நாடுகளின்மீது அவர் படையெடுக்க விரும்பினார். ஆனால் அவரது படைவீரர்கள், தாங்கள் நாட்டைவிட்டு வந்து நீண்டகாலம் ஆகி விட்டபடியால், தங்கள் நாட்டிற்குத் திரும்பிச் செல்லவேண்டும் என்று சொன்னார்கள். அதனால் அலெக்சாந்தர் தம் சொந்த நாடாகிய கிரீஸுக் குத் திரும்பவேண்டியதாயிற்று.

இவ்வாறு அலெக்சாந்தர் தம் நாட்டுக்குத் திரும்பிச் செல்லுகையில் வழியில் காய்ச்சல் கண்டு இறந்தார். அவருடைய இராஜ்யத்தை அவரது தளகர்த்தர்கள் பங்கிட்டுக் கொண் டார்கள். ஆசியாவிலுள்ள அவரது இராஜ்யப் பகுதிக்கு **ஸெல்யூகஸ்** என்னும் தளகர்த்தர் அரச ரானார். இதனால் இந்தியாவின் சில பாகங்களைச் ஸெல்யூகஸ் ஆள நேர்ந்தது.

கேள்விகள்

1. கிரேக்கர் என்போர் யாவர்?
2. அலெக்சாந்தர் எந்த நாட்டு அரசர்?
3. அவர் எந்தெந்த நாடுகளைக் கைப்பற்றினார்?
4. அவர் புருஷோத்தமரோடு போர் செய்து ஜெயித்த விதத்தைக் கூறு.

---

3. அசோகர்

வட இந்தியாவில் **மகத இராஜ்யம்** என்று ஓர் இராஜ்யம் இருந்தது. அதைச் சுமார் 200 வருஷங்களுக்கு முன், **சந்திரகுப்தர்** என்னும் சக்கர

வர்த்தி ஆண்டு வந்தார். அவர் மௌரிய வமிசத்தைச் சேர்ந்தவர். அவருக்குப் பிறகு அவருடைய



அசோகர் நாட்டிய கல் தூண்

புத்திரரான பிந்துசாரர் அரசு செலுத்தினர். அசோகர் பிந்துசாரருடைய புதல்வர்.

அசோகர் மிகுந்த தைரியம் உடையவர். அவருக்கு வேட்டையாடுவதில் அதிக விருப்பம் இருந்தது. போர் செய்வதிலும் அவர் வல்லவர். அவர் கலிங்க நாட்டின்மீது படையெடுத்துச் சென்றார். கலிங்கநாட்டு அரசருக்கும் இவருக்கும் கடும்போர் நடந்தது. அப்போரில் இருகட்சியாருடைய சேனையிலும் அதிகமான சேதம் ஏற்பட்டது. முடிவில் அசோகர் ஜெயம் பெற்றார். இந்த யுத்தத்தில் லக்ஷக்கணக்கான பேர் கொல்லப்பட்டனர். இன்னும் லக்ஷக்கணக்கான பேர் காயம் அடைந்தனர். இன்னும் இதனால் நாட்டில் பஞ்சம் உண்டாகி லக்ஷக்கணக்கான பேர் மாண்டனர். இவற்றையெல்லாம் கண்டு அசோகர் மிகவும் வருந்தினார். இனி ஒருவரோடும் யுத்தம் செய்வதில்லை என்று தீர்மானம் செய்துகொண்டார்.

பிறகு அசோகர் பௌத்த மதத்தைத் தழுவினார். அதுமுதல் வேட்டையாடுவதையும், மாமிசம் உண்பதையும் நிறுத்திவிட்டார். பௌத்த மதத்தில் அதிகப் பற்று உடையவராய், அதை உலக முழுவதும் பரவச் செய்யவேண்டும் என்று தீர்மானித்தார். அதற்காகப் பௌத்த மதக் கொள்கைகளைக் கற்பாறைகளிலும் கல் தூண்களிலும் செதுக்கி வைத்தார். அப்படிப்பட்ட பாறைகளையும், தூண்களையும் இப்போதும் நாம் இந்தியாவில் பல இடங்களில் காணலாம். பௌத்த சன்னியாசிகளைக் **கிரீஸ், பர்மா, இலங்கை** முதலிய வெளிநாடுகளுக்கு அனுப்பிப் பௌத்த மதத்தைப் பிரசாரம் செய்வித்தார். அசோகர் பௌத்தர்; ஆனா

லும் வேறு மதங்களின்மீது துவேஷம் இல்லாமல் இருந்தார்.

சேர, சோழ, பாண்டிய நாடுகளைத் தவிர, ஏறக் குறைய இந்தியா முழுவதையும் அசோகர் கீழ்ப் படுத்தினர். அவருடைய இராஜ்யத்தின் தலை நகரம் **பாடலி புத்திரம்** என்பது.

அசோகர் பிரயாணிகளின் சௌகரியத்திற் காகச் சாலைகளின் இரு பக்கங்களிலும் நிழல் தரும் மரங்களை வைத்தார்; அவசியமான இடங்களில் கிணறுகள் வெட்டினர்; சத்திரங்கள் கட்டினர்; மக்களுக்காகவும், மிருகங்களுக்காகவும் தனித் தனியே வைத்தியசாலைகளை அமைத்தார். தமது இராஜ்யத்தில் கிடைக்காத மருந்துகளையும், மூலி கைகளையும் பிற நாடுகளிலிருந்து வரவழைத்து உதவினர். இந்தியாவைச் சிறப்புடன் ஆண்ட அரசர்களுள் அசோகரும் ஒருவர். அதனல் அவருக்கு **மகா அசோகர்** என்று பெயர் வந்தது.

கேள்விகள்

1. **அசோகர் யாருடைய புதல்வர்?**
2. **கலிங்க யுத்தத்தால் அசோகருடைய வாழ்க்கையில் ஏற் பட்ட மாறுதல் என்ன?**
3. **அசோகர் ஜனங்களுக்குச் செய்த நன்மைகள் எவை?**

4. கி. மு.—கி. பி.

நாம் வருஷங்களை எண்ணிக்கையால் குறித்துக் கணக்கிட்டு வருகிறோம் அல்லவா? இந்த எண்ணிக்கையை ஆரம்பித்துக் கணக்கிடும் ஒரு விசேஷ சம்பவத்திற்குச் **சகாப்தம்** என்று பெயர்.

நீங்கள் சரித்திர புஸ்தகங்களில் **கி.மு., கி.பி.** என்று குறிக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். இந்தக் கி. மு., கி. பி. என்பவைகளுக்குப் பொருள் என்ன? கி. மு. என்பது **கிறிஸ்து நாதர் பிறப்புக்கு முன்** என்பதைக் குறிக்கும்; கி. பி. என்பது **கிறிஸ்து நாதர் பிறப்பிற்குப் பின்** என்பதைக் குறிக்கும். உதாரணமாகக் கி. மு. 600 ஆம் வருஷம் என்பது, கிறிஸ்து நாதர் பிறப்பதற்கு முன் 600-ஆம் வருஷத்தைக் குறிக்கிறது; கி. பி. 700-ஆம் வருஷம் என்பது, கிறிஸ்து நாதர் பிறந்த பின் 700-ஆம் வருஷத்தைக் குறிக்கிறது. கிறிஸ்

தவர்கள் இவ்வாறு **இயேசு கிறிஸ்துவின் பிறந்த நாள்** தொடங்கி வருஷங்களைக் கணக்கிடுகிறார்கள். இதற்குக் **கிறிஸ்து சகாப்தம்** என்று பெயர். உலகத்தில் பெரும்பாலோரால் அனுசரிக்கப்பட்டு வருவது இந்தக் கிறிஸ்து சகாப்தமே. கிறிஸ்து சகாப்தத்தின்படி இப்போது என்ன வருஷம் என்று தெரியும் அல்லவா? இப்போது 1947-ஆம் வருஷம் நடக்கிறது. இது கி. பி. 1947 ஆம் வருஷம் ஆகும்.

இங்கே காணப்படும் படத்தில் கி. மு. வருஷங்களும், கி. பி. வருஷங்களும் காட்டப்பட்டிருக்கின்றன. கி. மு. வருஷங்கள் இயேசு கிறிஸ்து நாதர் பிறந்த வருஷத்தை நோக்கிச் செல்லுகின்றன. இவ்வாறு செல்லும் பொழுது வருஷங்கள் குறைந்து கொண்டே போகின்றன. கி. மு. 2000-ம் வருஷத்தில் இருந்து ஆரம்பித்து 1900, 1800, 1700 என வருஷங்களில் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருவதைக் கவனியுங்கள். கி. பி. வருஷங்கள் இயேசுகிறிஸ்து நாதர் பிறந்த வருஷத்தில் இருந்து ஆரம்பித்து மேற்பட்டுச் செல்கின்றன. ஆகையால், வருஷங்களின் எண்ணிக்கை வரவர அதிகரித்துக் கொண்டே போகிறது. கி.பி. முதலாவது வருஷத்தில் ஆரம்பித்து 100, 200, 300 என்று வருஷங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு போவதைக் கவனியுங்கள். இந்த வித்தியாசத்தை நீங்கள் நன்ருக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

கேள்விகள்

1. கி. மு., கி. பி. என்பவைகளுக்குப் பொருள் என்ன ?
2. சகாப்தம் என்பது என்ன ?
3. கி. மு., கி. பி. வருஷங்களின் எண்ணிக்கையில் ஏற்படும் வித்தியாசம் யாது ?
4. அலெக்சாந்தர் கி. மு. 366-ல் பிறந்தார் ; அவர் தமது 32-ஆம் வயதில் இறந்தார். அவர் எந்த வருஷத்தில் இறந்தார் ?

---

5. விக்ரமாதித்தர்

கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில் இந்தியாவின் பெரும்பாகத்தைச் **சந்திரகுப்த விக்கிரமாதித்தர்** என்பவர் ஆண்டு வந்தார். அவர் **குப்த வமிசத்தைச் சேர்ந்தவர்.** மிகுந்த பராக்கிரமசாலி. தமது பராக்கிரமத்தைக் குறிப்பதற்காக அவர் **விக்கிரமாதித்தர்** என்று பட்டம் தரித்துக்கொண்டார். விக்கிரமாதித்தர் என்பதற்குப் பராக்கிரமத்தில் சூரியனைப் போன்றவர் என்பது அர்த்தம். அவர் **ஸாகர்கள்** என்னும் ஜாதியாருடைய இராஜ்யத்தின்மீது படையெடுத்துச் சென்று அதை ஜெயித்துக் கைப்பற்றினர்.

குப்த மன்னர்களுடைய காலத்தில் வட இந்தியா மிகவும் உன்னதமான நிலைமை அடைந்திருந்தது. தேசத்தில் பொன், வெள்ளி நாணயங்கள் வழங்கி வந்தன. ஜனங்கள் சந்தோஷமாக வாழ்ந்தார்கள். பல வைத்தியசாலைகளும் பற்பல முக்கியமான இடங்களில் அமைக்கப்பட்டன. தூக்கு தண்டனை விதிக்கும் வழக்கம் நிறுத்தப்பட்டது. குற்றவாளிகளுக்குக் கடுந் தண்டனை விதிக்கப்படவில்லை.

குப்த மன்னர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இந்து மதத்தைப் பெரிதும் ஆதரித்தார்கள். ஆனாலும் மற்ற மதங்களின் மீது துவேஷம் கொள்ளவில்லை. அவர்களுடைய காலத்தில் **சமஸ்கிருத பாஷை** நன்றாக விருத்தியடைந்தது. அவர்கள் தங்களுடைய நாணயங்களிலும், கல்வெட்டுகளிலும் சமஸ்கிருத பாஷையை உபயோகித்தார்கள்.

குப்த அரசர்கள் கல்விமான்களைப் பெரிதும் ஆதரித்தார்கள். விக்கிரமாதித்தருடைய சபையில் ஒன்பது சிறந்த கல்விமான்கள் இருந்தார்கள். அவர்களை **விக்கிரமாதித்தர் சபையின் நவமணிகள்** என்று சொல்வது வழக்கம். அவர்களில் **காளிதாசர், வராஹமிஹிரர், தன்வந்திரி** என்பவர்கள் முக்கியமானவர்கள். இவர்களுள் காளிதாசர் பல சமஸ்கிருத நூல்களை இயற்றினர். வராஹமிஹிரர் ஜோதிடத்தில் வல்லவராயிருந்தார். தன்வந்திரி என்பவர் வைத்திய சாஸ்திர நிபுணராக விளங்கினர்.

விக்கிரமாதித்தர் காலத்தில் **பாஹியான்** என்ற ஒரு சீன யாத்திரிகர் இந்தியாவுக்கு வந்தார். அவர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர். விக்கிரமாதித்தருடைய சிறப்பையும், குப்த அரச காலத்து பெருமையையும் விவரித்து அவர் ஒரு நூல் எழுதியிருக்கிறார். அதிலிருந்து அந்த அரசர் காலத்தில் நடந்த விசேஷங்கள் பலவற்றை நாம் அறியலாம்.

கேள்விகள்

1. விக்கிரமாதித்தர் என்பவர் யார்? அப்பெயருக்குப் பொருள் என்ன?

2. குப்த மன்னர்கள் காலத்தில் இராஜாங்கம் எவ்வாறு நடைபெற்றது ?
3. குப்த மன்னர்கள் காலத்தில் நடந்த விசேஷங்களை நாம் எதன் மூலம் அறியலாம் ?

---

6. ஹர்ஷ வர்த்தனர்

குப்த ராஜ்யம் அழிந்துவிட்டது. அதன் பிறகு வட இந்தியாவில் பல சிறு இராஜ்யங்கள் தோன்றின. அவைகளுள் ஓர் இராஜ்யத்தைக் கி. பி. ஆறும் நூற்ருண்டின் கடைசியில் **பிரபாகர வர்த்தனர்** என்னும் அரசர் ஆண்டுவந்தார். அவருடைய இராஜ்யத்திற்குத் **தனேசுவரம்** என்பது தலை நகராயிருந்தது. பிரபாகர வர்த்தனருக்குப்பின் அவருடைய மூத்த குமாரரான **இராஜ்ய வர்த்தனர்** அரசராஞர். அவருக்கு **ஹர்ஷ வர்த்தனர்** என்று ஒரு தம்பியும் **இராஜ்யஸ்ரீ** என்று ஒரு தங்கையும் இருந்தார்கள்.

இராஜ்யஸ்ரீயின் கணவனை மாளவ நாட்டு அரசன் போரில் வென்று கொன்று, அவளையும் பிடித்துச் சிறையில் வைத்துவிட்டான். அதை அறிந்த இராஜ்ய வர்த்தனர் அவன்மீது படையெடுத்துச் சென்று அவனை வென்ருர். ஆனல் போரின் முடிவில் அவர் பகைவர் சூழ்ச்சியால் கொல்லப்பட்டார். இராஜ்ய வர்த்தனருக்குப் பிறகு, அவரது தம்பி **ஹர்ஷ வர்த்தனர்** பட்டம் பெற்ருர். அப்போது அவருக்கு வயது பதினெட்டு.

பட்டம் பெற்றவுடன் அவர் இராஜ்யஸ்ரீயைச் சிறையிலிருந்து மீட்பதற்காக ஒரு சேனையை

அனுப்பினர். அது போய்ச் சேருவதற்குள் இராஜ்யஸ்ரீ சிறையிலிருந்து தப்பித் தன் தாதிகளோடு இரகசியமாய்க் காட்டிற்குச் சென்றுவிட்டாள். பிறகு ஹர்ஷ வர்த்தனர் தாமே இராஜ்யஸ்ரீயைத் தேடிக் கொண்டு காட்டிற்குச் சென்றூர். காட்டில் பல நாட்கள் அவளைத்தேடித் திரிந்தார். கடைசியாக ஒரு நாள் அவர் அவளைக் கண்டுபிடித்தார். அச்சமயத்தில் அவள் காட்டில் ஒரு பெருந்தீயை வளர்த்து அதில் விழும் நிலையில் இருந்தாள். ஹர்ஷவர்த்தனர் அச்சமயத்தில் அங்கே போகாமல் இருந்தால் அவள் அத்தீயில் விழுந்து இறந்து சாம்பலாயிருப்பாள். அவர் தீயை அணைத்துவிட்டு அவளையும் அவளது தாதிகளையும் அழைத்துக் கொண்டு தம் நாட்டிற்குத் திரும்பினர்.

பிறகு ஹர்ஷ வர்த்தனர் தம் சேனையை மிகவும் அதிகமாக விருத்தி செய்து சுற்றுப்புற இராஜ்யங்களோடு யுத்தம் செய்து வெற்றி பெற்றூர். அதனல் ஏறக்குறைய வட இந்தியா முழுவதும் அவர் வசமாயிற்று. அதன்பின் அவர் தக்காணத்தின்மீது படையெடுத்தார். அப்போது தக்காணத்தில் அரசாண்ட **சாளுக்கிய** அரசராகிய **இரண்டாம் புலிகேசி** என்பவர் ஹர்ஷவர்த்தனரை எதிர்த்தார். இருவருக்கும் நடந்த போரில் ஹர்ஷவர்த்தனர் தோல்வியுற்றூர். அதன் பின் அவர் வேறு நாடுகளின்மீது படையெடுப்பதை நிறுத்திவிட்டார்.

ஹர்ஷவர்த்தனர் மழைக்காலத்தைத் தவிர மற்றக் காலங்களில் தம்முடைய இராஜ்யத்தில்சுற்றுப் பிரயாணம் செய்து வருவார். அவர் ஜனங்

களிடமிருந்து குறைந்த வரியே வசூலித்தார். தமது உத்தியோகஸ்தருக்குக் குறித்தகாலம்தவருமல் சம்பளம் கொடுத்து வந்தார். குற்றவாளிகளுக்குக் கடுந்தண்டனை விதித்தார். ஹர்ஷவர்த்தனர் சிறந்த கல்விமான்; பல நூல்களை இயற்றியிருக்கிறார். **நாகாநந்தம், இரத்தினுவளி** என்னும் சமஸ்கிருத நாடகங்கள் அவரால் இயற்றப்பெற்றவை. ஹர்ஷவர்த்தனர் காலத்தில் **ஹுவான் சுவாங்** என்னும் ஒரு சீன யாத்திரிகர் இந்தியாவிற்கு வந்தார். அவர் ஹர்ஷ வர்த்தனருடைய இராஜாங்க விஷயத்தைப் பற்றிப் புகழ்ந்து, ஒரு நூல் இயற்றியிருக்கிறார்.

கங்கையும் யமுனையும் கூடும் **பிரயாகை** என்னும்மிடத்தில் ஹர்ஷவர்த்தனர் ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை ஒரு பெரிய உற்சவம் நடத்துவது வழக்கம். ஹுவான் சுவாங் இந்தியாவிற்கு வந்த காலத்தில் அந்த உற்சவம் ஆரும் முறையாக நடந்தது. ஹுவான் சுவாங் அந்த உற்சவத்தைப்பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார். "அந்த உற்சவத்தின் போது **சூரியன், சிவன், புத்தர்** முதலிய விக்கிரகங்களுக்கு ஊர்வலமும் விழாவும் நடைபெற்றன. ஏராளமான ஜனங்களுக்கு அன்னம் அளிக்கப்பட்டது. அரசர் பொக்கிஷத்திலுள்ள பணத்தை எல்லாம் தானம் செய்தார். இந்த உற்சவம் மூன்று மாதங்கள் நடைபெற்றது"

கேள்விகள்

1. ஹர்ஷ வர்த்தனர் என்பவர் யார்? அவருடைய இராஜ்யத்தின் பரப்பு என்ன?

2. ஹர்ஷ வர்த்தனர் இராஜ்யஸ்ரீயைக் கண்டுபிடித்த வரலாற்றைக் கூறு,
3. ஹர்ஷ வர்த்தனர் நடத்திய உற்சவத்தைப்பற்றி ஹுவான் சுவாங் என்ன கூறியிருக்கிறார் ?

7. முகம்மது நபி

முகம்மது நபி முஸ்லிம்களின் தீர்க்கதரிசி ஆவர். அவர் அரேபியா தேசத்தின் தலைநகரான **மக்காவில்** கி. பி. 571-ஆம் ஆண்டில்பிறந்தார். அவர் **குறைஷி** குலத்தைச் சேர்ந்தவர். அவருடைய தந்தையின் பெயர் அப்துல்லா; தாயார் பெயர் அமீனா. முகம்மது நபி பிறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன் அவரது தந்தை இறந்துவிட்டார். அவரது தாய் அமீனா அவருக்கு ஆறு வயதாகுமுன் இறந்துவிட்டார்.

இளமைமுதலே முகம்மது நபி, சத்தியம் தவருமை, கருணை, பிறர்க்குத் துன்பம் செய்யாமை, பெருந்தன்மை முதலிய சிறந்த நற்குணங்களை உடையவராயிருந்தார். அவரது நற்குணங்களைக் கண்ட அராபியர் அவரை **அல் அமீன்** அதாவது சரியான நம்பிக்கைக்கு உரியவர் என்று அழைத்தார்கள்.

அக்காலத்தில் மக்கா நகரில் **கதீஜா** என்னும் பணக்காரப் பெண்மணி ஒருத்தி இருந்தாள். அவள் அயல் நாடுகளோடு வியாபாரம் செய்து வந்த ஒரு குடும்பத்தின் தலைவி ஆவாள். அவள் தன் கணவனை இழந்த ஒரு கைம்பெண்ணாக இருந்தாள். அதனால் அவளது வியாபாரப் பொறுப்பை

ஏற்று நடத்துவதற்கு தக்க ஒருவர் வேண்டியிருந்தது. அவ்விதமானவர் முகம்மது நபியே எனத் தேர்ந்து, அவள் அவரை அவ்வேலையில் அமர்த்தினள்.



மக்கா நகரம்

முகம்மது நபி வியாபாரத்தை நன்கு நடத்துபவராய்க் கதீஜாவிற்கு நல்ல லாபம் தேடித் தந்ததோடு, தாம் நேர்மையாகவும் நடந்துவந்தார். அவரது களங்கமற்ற ஒழுக்கத்தைக் கண்ட கதீஜா சீமாட்டி அவரை மணந்துகொண்டார். திருமணம்

நடந்த பிறகு முகம்மது நபி வியாபாரத்தில் அதிகமாகக் கலந்துகொள்ளாமல் பல தருமங்களைச் செய்துவந்தார். சுமார் 15 வருஷங்கள் இவ்விதம் கழிந்தன.

குறைஷிகள் விக்கிரக ஆராதனை செய்பவர்கள். அவர்கள் முரட்டுக் குணம் வாய்ந்தவர்கள். அவர்களிடமுள்ள குறைகளைப் போக்க வேண்டுமென்று நபி நாயகம் விரும்பினர். ஜிப்ரீல் என்னும் தேவன் அவருக்கு உபதேசம் செய்தருளினர். அதன் மூலமாகத் தாம் அறிந்த இஸ்லாம் மதத்தின் உண்மைகளை அவர் ஜனங்களுக்குப் போதிக்கலானர்.

குறைஷிகள் இஸ்லாம் மதத்தின் கொள்கைகளை எதிர்த்து முகம்மது நபியுடன் பல வருஷங்கள் போராடிக் கடைசியில் தோற்றனர். முதல் மூன்று வருஷங்களில் 40 பேர் நபிக்குச் சீடரானர்கள். அச்சீடர்கள் இவரை முகம்மது நபி எனக் கொண்டாடினர். இவருக்கு நபி பட்டம் கிடைத்த 10ஆம்வருஷத்தில் கதீஜா சீமாட்டி மரணமடைந்தார். அப்போது மக்காவில் இவரது சீடர்களைத் தவிர இவருக்கு வேறு நண்பர்கள் கிடையாது. குறைஷிகள் இவருக்கு தீங்கு செய்ய முயன்றனர்கள். ஆயினும் அவர் தம் கொள்கைகளை விடாது போதித்து வந்தார்.

நபி பட்டம்பெற்ற 13-ஆம் வருஷத்தில் முகம்மது நபி மதீனவுக்குப் போகத் தீர்மானித்தார். அதையறிந்த அவரது விரோதிகளான குறைஷிகள் அவரை அச் சமயத்தில் கொன்று

விடச் சூழ்ச்சி செய்தார்கள். அதை அறிந்த முகம்மது நபி, நடு இரவில் வீட்டை விட்டுப் புறப்பட்டுத் தம் முக்கிய சீடரான **அபூபக்கர்** என்பவரோடு **தௌர்** என்னும் குகையில் மறைந்து தங்கியிருந்தார். மூன்று நாள் இவ்விதம் இருந்த பிறகு, நான்காம் நாள் இவர் தம் சீடரோடு மதீனுவுக்குப் போய்ச் சேர்ந்தார். இச்சம்பவம் **ஹிஜ்ரத்** என்று வழங்கப்படுகிறது. இதிலிருந்தே **ஹிஜ்ரத்** என்னும் முஸ்லிம் சகாப்தம் கணக்கிடப்படுகிறது.

ஹிஜ்ரி இரண்டாவது ஆண்டில் இஸ்லாம் மதத்தை ஒழித்து விடவேண்டும் என்ற எண்ணத்துடன் குறைஷிகள் ஒரு பெரிய சேனையோடு மதீனுவின் மீது படையெடுத்துச் சென்றூர்கள். அவர்களை முகம்மது நபி ஒரு சிறு படையுடன் **பத்ர்** என்னும் இடத்தில் எதிர்த்து வென்றூர். பிறகு நபி மதீனுவைச் சுற்றி ஓர் அகழி வெட்டிக்கொண்டு யுத்தத்திற்குத் தயாரானூர். குறைஷிகள் மீண்டும் அவரை எதிர்த்துத் தோல்வியடைந்து திரும்பினூர்கள்.

ஹிஜ்ரி 8-வது ஆண்டில் சுமார் 1000 முஸ்லிம் வீரருடன் முகம்மது நபி மெக்காவுக்குச் சென்று, ஒரு துளி இரத்தமும் சிந்தாமல் அவ்வூரைப் பிடித்துக்கொண்டார். குறைஷிகளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அடுத்த வருஷத்தில் நபி நாயகம் அந்நகரத்திற்கு அரசராக ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

'கடவுள் ஒருவரே; அவருக்கு உருவம் இல்லை; அவர் முன்னிலையில் எல்லாரும் சகோதரர் ஆவர்;

விக்கிரக ஆராதனை கூடாது; மதுபானத்தை ஒழிக்கவேண்டும்; தினமும் ஐந்து முறை கடவுளைத் தொழவேண்டும்'' என்பவைகளே முகம்மது நபி போதித்த இஸ்லாம் மதத்தின் முக்கிய கொள்கைகளாகும்.

ஹிஜ்ரி 10-ஆம் வருஷத்தில் முகம்மது நபி மக்காவுக்கு அருகிலுள்ள **அரபாத் மைதானத்தில்** தம்முடைய இறுதிப் பிரசங்கத்தைச் செய்தார். அப்போது அவர் இஸ்லாம் மதத்தின் அடிப்படையான கொள்கைகளை விளக்கினர். மறு வருஷம் அவர் ஆண்டவன் திருவடியை அடைந்தார். அப்போது இஸ்லாம் மதம் அரேபியா தேசம் முழுவதும் பரவியிருந்தது.

கேள்விகள்

1. முகம்மது நபியின் பெற்ரோர் யாவர்?
2. குறைஷிகள் ஏன் நபியைப் பகைத்தார்கள்?
3. ஹிஜ்ரீ என்பது என்ன?
4. இஸ்லாம் மதத்தின் முக்கிய கொள்கைகள் எவை?
5. முகம்மது நபி தமது இறுதிப் பிரசங்கத்தை எங்கே எப்பொழுது செய்தார்?

---

8. பல்லவர்கள்

கி. பி. ஐந்தாம் நூற்ருண்டிலிருந்து ஒன்பதாம் நூற்ருண்டு வரையில் பல்லவ வமிசத்து அரசர்கள் தென்னிந்தியாவில் பிரசித்தி பெற்று இருந்தார்கள். அவர்களுடைய இராஜ்யத்திற்குக் **காஞ்சீபுரம்** தலைநகராக இருந்தது. கி.பி. 600-ம் வருஷத்தில் பல்லவ இராஜ்யம் உன்னதநிலையை அடைய ஆரம்பித்தது. அப்போது பல்லவ அரசராயிருந்த

சிம்ஹ விஷ்ணு போத ராஜன் பாண்டிய மன்னர், சோழ மன்னர், இலங்கை மன்னர் முதலியவர்களை ஜெயித்தார்.

சிம்ஹ விஷ்ணுவுக்குப் பிறகு சிறப்புடன் விளங்கிய பல்லவ அரசர் **நரசிம்ஹ வர்மன்** என்பவர். அவ



Photo: Archaeological Survey of India.

மஹாபலிபுரத்திலுள்ள கல் ரதங்கள்

ருக்கு **மஹாமல்லன்** என்ற ஒரு பெயரும் உண்டு. அவர் காலத்தில் சாளுக்கிய அரசரான இரண்டாம் புலிகேசி பல்லவ இராஜ்யத்தின்மீது படையெடுத்துவந்தார். நரசிம்ஹவர்மன் அவரைத் தோற்கடித்துச் சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, அதன் தலைநகரான **பாதாமி** என்னும் நகரத்தைக் கைப்பற்றினர்.

பல்லவ அரசர்கள் அழகான கோயில்களையும், மாளிகைகளையும் கட்டினார்கள். அவற்றைக் காஞ்சீபுரத்தில் இப்போதும் நாம் காணலாம். நரசிம்ஹ வர்மன் மஹாபலிபுரத்தில் கற்பாறைகளைக்



மஹாபலிபுரத்திலுள்ள கோயில்

குடைந்து பல கோயில்களை உண்டாக்கியிருக்கிறார். அவைகளில் சில ரத வடிவமாக இருக்கின்றன. பல்லவ அரசர்கள் காலத்தில் மஹா பலிபுரம் ஒரு துறைமுகப்பட்டினமாகவும் பெரிய வியாபார ஸ்தலமாகவும் இருந்தது. அங்கே இரவில் வரும் கப்பல்களுக்கு உதவியாக அக்காலத்தில் ஒரு பாறையின் மீது ஒரு தீபஸ்தம்பம் கட்டப்பட்டது. அதை இப்போதும் காணலாம். இப்

போது மஹாபலிபுரம் ஒரு சிறு கிராமமாக இருக்கிறது. ஆயினும் அங்குள்ள பாறைக் கோயில்களைப் பார்க்கப் பலர் அங்கே செல்கிறார்கள்.

கேள்விகள்

1. பல்லவ அரசர்களில் இருவர் பெயர்களைக் கூறு.
2. பல்லவ அரசர்கள் செய்த சிறந்த காரியங்களுள் ஒன்று சொல்லு.
3. மகாபலிபுரத்தில் உள்ள விசேஷங்கள் என்ன ?

---

9. இராஜபுத்திரர்

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இராஜபுத்திரர் என்ற ஒரு ஜாதியார் வட இந்தியாவில் தோன்றினார்கள். அவர்கள் பல சிறு இராஜ்யங்களை ஸ்தாபித்தார்கள். அவைகளுள் டில்லி, ஆஜ்மீர், கன்னோஜ், பாஞ்சாலம், வங்கம், காச்மீரம் என்பவை முக்கியமானவை.

இராஜபுத்திரர் என்பவர் பழைய க்ஷத்திரியர்களின் சந்ததியார் என்று கருதப்படுகிறார்கள். இவர்கள் சிறந்த போர்வீரர்கள்; உயிர்போகும் வரையில் போரிடப் பின்வாங்கமாட்டார்கள். புறங்காட்டி ஓடும் வழக்கம் இவர்களிடத்தில் கிடையாது. யுத்தத்தில் இறப்பதை இவர்கள் கௌரவமாக மதிப்பார்கள். இவர்கள் விவசாயம், வர்த்தகம் முதலிய தொழில்களைச் செய்யாமல் போர் புரிந்து நாடாள்வதையே தொழிலாகக் கொண்டிருந்தார்கள்.

இராஜபுத்திரப் பெண்கள் மிகவும் அழகு வாய்ந்தவர்கள். இவர்களும் இராஜபுத்திர புரு

ஷர்களைப் போலவே தைரியமும் வீரமும் உடைய வர்கள். தமது புருஷர்கள் சண்டையில் தோற்று இறந்துவிட்டால் இவர்கள் ஒரு பெருந்தீயை மூட்டி அதில் விழுந்து இறந்து விடுவார்கள். இந்த வழக்கத்திற்கு **ஜோஹர்** என்று பெயர்.

இராஜபுத்திரர் இராஜபுத்திரப் பெண்களுக்கு அதிக கௌரவம் கொடுத்தார்கள். விரோதி களான இரண்டு இராஜபுத்திர அரசர்களில் ஒரு வரை மற்றொருவர் எதிர்த்துத் தாக்கினால் அவ ருடைய மகள் தன் வளையலைக் கழற்றித் தன் தகப்பனுக்கு நண்பரான ஓர் இராஜபுத்திர அரச ருக்கு அனுப்புவாள். அவர் அதைப் பெற்றுக் கொண்டு, அவருடைய தகப்பனருக்கு உதவி செய்ய வருவார். இவ்வாறு வளையலை அனுப்பி உதவிபெறும் வழக்கத்திற்கு **வளையல் உடன்பாடு** என்று பெயர்.

இராஜபுத்திரர் இந்துக்கள். அவர்கள் இந்து மதத்தை ஆதரித்தார்கள். அவர்கள் பல கோயில் களைக் கட்டி அவற்றிற்கு ஏராளமான பொருளைத் தானமாகக் கொடுத்து உதவியிருக்கிறார்கள்.

இராஜபுத்திரர்களுக்குள் ஒற்றுமை என்பது இல்லை. அவர்களுள் ஒருவரை ஒருவர் பகைத்து அடிக்கடி போர் புரிந்து வந்தார்கள். அதனால் அவர்கள் ஒரு பெரிய இராஜ்யத்தை ஸ்தாபிக்க முடியாமல் பல சிறு இராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டு ஆண்டு வரவேண்டியதாயிற்று.

கேள்விகள்

1. இராஜபுத்திர இராஜ்யங்களுள் மூன்று கூறு.
2. இராஜபுத்திரரது குணவிசேஷங்கள் என்ன?

3. ஜோஹர், வளையல் உடன்பாடு என்பவை எவை.
4. இராஜபுத்திரர்கள் ஒரு பெரிய இராஜ்யத்தை ஸ்தாபிக்க முடியாமற் போனதற்குக் காரணம் என்ன?

---

10. முஸ்லிம் படையெடுப்பு

இந்தியாவிற்கு வடமேற்கில் கஜினி என்னும் நகரைத் தலைநகராகக் கொண்ட ஒரு முஸ்லிம் இராஜ்யம் இருந்தது. அந்த இராஜ்யத்தை ஆண்ட அரசர்களில் மஹ்மூது என்பவர் மிகவும் பராக்கிரமம் வாய்ந்தவர். அவருக்குக் கஜினி மஹ்மூது என்று பெயர்.

அவர் சிறுவரா யிருக்கும்போது இந்தியாவில் வர்த்தகம் செய்துவந்த சில வியாபாரிகளைச் சந்தித்தார். அவர்கள் இந்தியாவின் செல்வத்தைப் பற்றி அதிகமாய் புகழ்ந்து பேசினார்கள். அதைக் கேட்ட அவர், தாம் பெரியவரான பிறகு இந்தியாவின் மீது படையெடுக்க வேண்டும் என்ற எண்ணங் கொண்டார்.

கஜினி மஹ்மூது கி. பி. 998-ம் ஆண்டில் அரசரானார். அவர் தமது இராஜ்யத்தைச் சுற்றியுள்ள பாரசீகம், ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளை முதலில் கைப்பற்றினார். பிறகு இந்தியாவின் மீது பதினேழு முறை படையெடுத்தார். அக்காலத்தில் வட இந்தியாவில் பல சிற்றசர்கள் இருந்தார்கள். அவர்கள் சில சமயம் தனியாகவும் சில சமயம் பலர் ஒன்று சேர்ந்தும் அவரை எதிர்த்தார்கள். ஆயினும் அவரை ஜெயிக்க முடியவில்லை.

கஜினி மஹ்மூதுவுக்கும் இந்தியாவில் தமது இராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. அவர் இந்தியாவிலிருந்து ஏராளமான பொருளைக் கொண்டுபோகவே எண்ணினர். ஆகையால், அவர் இந்து கோயில்களில் புகுந்து அங்கே இருந்த பொன், வெள்ளி இவற்றுலான பொருள்களையும், ஆபரணங்களையும் கைப்பற்றிக் கொண்டு சென்ருர்.

கஜினி மஹ்மூது இந்தியாவில் செய்த யுத்தங்களில் **சோமநாதபுரத்துப் போர்** முக்கியமானது. இப்போரின்பொழுது கஜினி மஹ்மூது அந்நகரிலுள்ள கோயிலைத் தாக்கினர். பல இராஜபுத்திரர்கள் ஒன்று கூடி அவரை எதிர்த்தும் பயன் இல்லாமற்போயிற்று. இராஜபுத்திரர் தோற்றனர். கோயில் அர்ச்சகர்கள் விக்கிரகத்தை ஒன்றும் செய்யாமல் இருந்தால் ஏராளமான பொருள் கொடுப்பதாகச் சொன்னர்கள். ஆயினும் கஜினி மஹ்மூது அவர்கள் சொல்லைக் கேளாமல் விக்கிரத்தை உடைத்து ஏராளமான பொருளை எடுத்துக் கொண்டு சென்ருர்.

கஜினி மஹ்மூது இறந்த பிறகு அவரது இராஜ்யத்தைக் **கோரி முகம்மது** என்ற வேறு வம்சத்து அரசர் ஒருவர் கைப்பற்றிக் கொண்டார். அவர் இந்தியாவில் ஓர் இராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்று எண்ணி இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார். **தனேசுவரம்** என்னுமிடத்தில் அவருக்கும் **பிருதிவிராஜன்** என்பவருக்கும் போர் நடந்தது. பிருதிவிராஜன் ஜெயம் அடைந்

தார். தோல்வியடைந்த கோரி முகம்மது தம் நாட்டிற்குத் திரும்பிச் சென்றார்.

பிருதிவிராஜன்மீது அவரது மாமனாராகிய ஜயசந்திரன் தீராப்பகை கொண்டிருந்தார். அவர் கோரி முகம்மதுவை மறுபடியும் பிருதிவி ராஜன் மீது படையெடுக்கும்படியும், தாமும் உதவிக்கு வருவதாகவும் சொல்லி அழைத்தார். அவ்விதமே இரண்டாம் முறை படையெடுத்து வந்த கோரி, அதே தனேசுவரம் என்னுமிடத்தில் யுத்தம் செய்து, பிருதிவி ராஜனைத் தோற்கடித்தார். சண்டையில் பிருதிவி ராஜன் மாண்டார். அவரது மனைவி **சம்யுக்தை** தீயில் விழுந்து இறந்தாள். பிறகு கோரி மற்றொரு முறை இந்தியாவின்மீதுபடையெடுத்து வந்து, ஜயச்சந்திரனோடு போர் புரிந்து அவரைத்தோற்கடித்து அவரது இராஜ்யத்தையும் கைப்பற்றினார்.



குத்புமினார்

கோரி முகம்மது தாம் ஜெயித்த இந்திய இராஜ்யங்களை ஆளுவதற்குத் தமது அடிமையாகிய **குத்புதீன் ஐபெக்** என்பவரை நியமித்தார். கோரி முகம்மது இறந்த பிறகு-

அவருக்கு ஆண்சந்ததி இல்லாததால் அவருடைய இந்திய இராஜ்யத்திற்குக் குத்புதீனே அரசரானர்.

குத்புதீன் சிறந்த வீரர். அவர் தம்மை எதிர்த்த எல்லா இராஜபுத்திர அரசர்களையும் ஜெயித்தார். அவர் நான்கு வருஷ காலம் டில்லியை ஆண்டார். டில்லியில் **குத்புமினர்** என்னும் கட்டிடம் அவரால் ஆரம்பிக்கப்பட்டு அவருக்குப் பின்வந்த **அல்டாமிஷ்** என்பவரால் கட்டி முடிக்கப்பட்டது. முஸ்லிம்கள் முதன் முதல் இந்தியாவில் கட்டிய கட்டிடம் இதுவே. குத்புதீன் அடிமையாயிருந்ததால் அவரது வமிசத்து அரசர்கள் 'அடிமை அரசர்கள்' என்று சரித்திர ஆசிரியர்களால் அழைக்கப்படுகிறுர்கள்.

கேள்விகள்

1. கஜினி மஹ்மூது செய்த காரியங்கள் என்ன ?
2. கோரி மூகம்மது எந்த நோக்கத்தோடு இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார் ? அவரது நோக்கம் எப்படி முடிந்தது ?
3. குத்புதின் அயிபெக் இந்தியாவில் அரசரான விதத்தைக் கூறு.

---

11. கிருஷ்ண தேவ ராயர்

கி. பி. 14-ம் நூற்றுண்டில் **வாரங்கல்** என்னும் ஊரில் **ஹரிஹரர், புக்கர்** என்னும் இரு சகோதரர் இருந்தார்கள். அப்போது **முகம்மது துக்ளக்** என்ற முஸ்லிம் அரசர் அந்நகரின்மீது படையெடுத்து வந்து அதைப் பிடித்துக்கொண்டார். அப்போது அவ்விரு சகோதரரும் அங்கிருந்து ஓடித் துங்க

பத்திரை நதிக்கரையிலிருந்த **ஆனைக்குந்தி** என்னும் ஊரை அடைந்தார்கள். அங்கே அவர்கள் அவ்வூர் அரசனது சபையில் முறையே மந்திரியாககவும், சேனைத் தலைவராகவும் அமர்ந்தார்கள். பிறகு காலக் கிரமத்தில் ஹரிஹரர் தாமே அதற்கு அரசரானார்.

ஆனைக்குந்தி என்பது ஒரு சிறு இராஜ்யம். அதன் அரசராகிய ஹரிஹரருக்கு **வித்யாரண்ய சுவாமிகள்** என்ற ஒரு பெரியார் குருவாக இருந்தார். அந்தக் குருவினது விருப்பத்தின்படி ஹரிஹரர் **விஜயநகரம்** என்ற ஒரு புதிய பட்டணத்தைத் துங்க பத்திரா நதிக்கரையில் ஸ்தாபித்தார். அதையே அவர் தமது தலைநகராகக்கொண்டார். அது முதல் அவரது இராஜ்யத்திற்கு **விஜயநகர இராஜ்யம்** என்று பெயர் வழங்கலாயிற்று.

விஜயநகர இராஜ்யத்தைப் பல மன்னர்கள் புகழுடன் ஆண்டார்கள். அவர்களுள் மிகவும் சிறப்புடன் விளங்கியவர் கிருஷ்ண தேவ ராயர் ஆவார். அவர் சிறு வயதில் தமது தந்தையின் மந்திரியாகிய **திம்மரசு** என்பவர் வீட்டில் வளர்ந்து வந்தார். அப்போது கிருஷ்ண தேவராயர் திம்மரசைத் தம் தந்தை என எண்ணி, அவரை **அப்பாஜி** என்று அழைத்து வந்தார். அப்பாஜியின் உதவியால் கிருஷ்ண தேவராயர் விஜயநகர இராஜ்யத்திற்கு அரசரானார். தம்முடைய தகப்பனாரைப் போலவே கிருஷ்ண தேவராயரும் தமக்கு அப்பாஜியையே மந்திரியாகக் கொண்டிருந்தார்.

கிருஷ்ண தேவராயர் அயல் நாடுகளை ஜெயிக்கப் புறப்பட்டு முதன் முதல் ஒரிஸ்ஸா

மன்னரோடு போர் செய்து வென்றார். பிறகு பாமினி சுல்தானையும், பீஜப்பூர் சுல்தானையும் தோற்க கடித்து ரெய்ச்சூரைக் கைப்பற்றினார். தமது இராஜ்யத்தில் நடந்த கலகங்களை அடக்கினார்.

கிருஷ்ண தேவராயர் வசீகரமான முகமும் கம்பீரமான தோற்றமும் உடையவர்; மிகவும் அன்பு வாய்ந்தவர்; சிறந்த நீதிமான்; தமது பிரஜைகளுக்குப் பல நன்மைகளைச் செய்தார். இவர் காலத்தில் ஐரோப்பியர் சிலர் விஜயநகரத்திற்கு வந்தார்கள். அவர்கள் கிருஷ்ண தேவராயரைப் புகழ்ந்து சில குறிப்புகள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

கிருஷ்ண தேவராயர் இந்துமதத்தைச் சேர்ந்தவர். அவர் பல கோயில்களைக் கட்டினார். அவருடைய தாய் மொழி தெலுங்கு. தெலுங்கு பாஷையில் அவருக்குச் சிறந்த தேர்ச்சியுண்டு. அவரது சமஸ்தானத்தில் பல தெலுங்கு வித்வான்கள் இருந்தார்கள். அப்புலவரும் அவரும் சேர்ந்து பல நூல்களை இயற்றினார்கள். தெனாலிராமர் என்ற ஒருவர் கிருஷ்ண தேவராயரது சமஸ்தானத்தில் புலவராகவும் விகட கவியாகவும் இருந்தார். அவர் தமது விகடத் திறமையால் எல்லாரையும் மகிழ்வித்து வந்தார்.

கேள்விகள்

1. கிருஷ்ண தேவராயர் என்பவர் யார்? அவர் எந்த நாட்டிற்கு எப்படி அரசரானார்?
2. அப்பாஜி என்பவர் யார்?
3. கிருஷ்ண தேவராயரது குணங்களையும் அவர் செய்த காரியங்களையும் சொல்லு.
4. கிருஷ்ண தேவராயர் ஜெயித்த நாடுகள் எவை?

12. அக்பர்

இந்தியாவை ஆண்ட மொகலாய வமிசத்து அரசர்களில் **அக்பர்** மிகவும் புகழ்பெற்றவர். இவர் ஹுமாயூனின் புதல்வர். மொகலாய 'வமிசத்தை ஸ்தாபித்த பேபர் இவரது பாட்டனர் ஆவார்.

அக்பருக்கு 13 வயது நடக்கும்போது அக்பருக்குப் பதிலாக அவருடைய மாமனை **பைராம்கான்**

அக்பர்

ஜோதிபாய்

என்பவர் இராஜ்ய காரியங்களைக் கவனித்துவந்தார். அக்பருக்கு 18 வயது ஆனதும் அவர் இராஜ்யம் ஆள விரும்பினர். இன்னும் சில காலம் இராஜ்யம் ஆளலாம் என்று எண்ணியிருந்த பைராம்கானுக்கு அது பிடிக்கவில்லை. அதனல் பைராம்கான் அக்பருக்கு விரோதமாகக் கலகம் செய்தார். அக்பர் அக்கலகத்தை அடக்கிவிட்டுப் பைராம்கானை மன்னித்து, அவரை முஸ்லிம்களின்

புண்ணிய க்ஷேத்திரமான மக்காவிற்கு யாத்திரை போகும்படி அனுப்பினர்.

அக்பர் சிறந்த பராக்கிரமசாலி; தைரியமாய்ச் சண்டை செய்வார்; குதிரை சவாரி செய்வதில் அதிகப் பிரியம் உள்ளவர். இவர் பல நாடுகளின் மீது படையெடுத்துச் சென்று அவற்றைக் கைப் பற்றிக் கொண்டார். வட இந்தியா முழுவதும் தக்காணத்தில் ஒரு பகுதியும் இவரது இராஜ்ய மாய் இருந்தது.

அக்பர் இந்து முஸ்லிம் என்னும் இரு சமூகத்தினரையும் சமமாக நடத்தினர். அவரது காலத்திற்கு முன்னிருந்த முகம்மதிய அரசர்கள் இந்துக்களிடம் வசூல் செய்த **ஜிஸியா** என்னும் தலைவரியை அவர் நீக்கினர். அவர் இராஜபுத்திரப் பெண்களை மணந்து கொண்டார். அவருடைய பட்டமகிஷியான **ஜோதிபாய்** ஓர் இராஜபுத்திர மன்னரின் புதல்வி. அவர் தம்முடைய புதல்வருக்கும் இராஜபுத்திரப் பெண்ணை மணம் செய்வித்தார். அவர் இந்துக்களுக்கு இராஜாங்கத்தில் உயர்ந்த பதவிகளை அளித்தார். **இராஜா பகவன்தாஸ், இராஜா மான்ஸிங், இராஜா தோடர்மால்** ஆகிய இராஜ புத்திரர்கள் அக்பரது சமஸ்தானத்தில் முக்கிய உத்தியோகஸ்தர்களாக விளங்கினர்கள்.

அக்பர் சமஸ்தானத்தில் **அபுல்பாஸல், அபுல் பைஸி** என்னும் இரு முஸ்லிம் சகோதரர்கள் இருந்தார்கள். அவர்கள் சிறந்த அறிஞர்கள். அபுல் பைஸி அக்பருடைய அரண்மனையில் ஒரு பெரிய நூல் நிலையத்தை ஸ்தாபித்தார். அபுல் பாஸல்

இராஜ்ய நிர்வாகத்தில் அக்பருக்கு உதவி செய்தார். அவர் **அயினி அக்பரி, அக்பர் நாமா** என்னும் இரண்டு நூல்களை இயற்றினர். அந்த நூல்களிலிருந்து அக்பருடைய சரித்திரத்தையும், அவரது இராஜ்ய நிர்வாகத்தையும் பற்றித் தெரிந்துகொள்ளலாம்.

அக்பர் சிறந்த அறிவாளியாக விளங்கினர். அவர் கல்விமான்களைக்கொண்டு சிறந்த நூல்களைப் படிக்கச் செய்து, அவற்றைக் கேட்டுத் தமது அறிவை வளர்த்துக்கொண்டார். அவர் அதிக ஞாபக சக்தியுடையவர். கேட்ட விஷயங்களை அவர் ஒருபோதும் மறப்பதில்லை.

அக்பர் ஜனங்களுக்குப் பல நன்மைகள் செய்தார். அவர் குடிகளுடைய நிலங்களை அளந்து, அவற்றின் வளப்பத்திற்குத் தகுந்தபடி வரி விதித்தார். இந்த வேலையை இராஜா தோடர்மால் செய்தார். அக்பர் 60 வருஷகாலம் அரசு செலுத்தினர். இந்தியாவை ஆண்ட சிறந்த அரசர்களுள் அக்பர் ஒருவர். அதனல் அவரை **மகா அக்பர்** என்று சொல்வார்கள்.

கேள்விகள்

1. பைராம்கான் என்பவர் யார்? அவரைப்பற்றித் தெரிந்ததைக் கூறு.
2. அக்பருடைய இராஜ்யத்தின் பரப்பு என்ன?
3. அக்பர் எவ்வாறு தமது அறிவை வளர்த்துக் கொண்டார்?
4. அபுல்பாஸல், அபுல்பைஸி, தோடர்மால் இவர்கள் இராஜ்ய விஷயத்தில் செய்த காரியங்கள் என்ன?

13. ஷாஜஹானும் தாஜ்மஹாலும்

அக்பருக்குப் பிறகு அவருடைய குமாரரான ஜஹாங்கீர் அரசரானர். ஜஹாங்கீருக்கு நான்கு புதல்

ஷாஜஹான்

மும்தாஜ்மஹால்

வர்கள் இருந்தார்கள். அவர்களுள் மூன்ருவது புதல்வரான ஷாஜஹான் மிகவும் சாமார்த்தியசாலி. அவரே ஜஹாங்கீருக்குப் பின் அரசரானர்.

ஷாஜஹான் காலத்தில் அவருடைய இராஜ்யத்தில் சில இடங்களில் கலகங்கள் உண்டாயின. அவர் அவற்றை அடக்கிவிட்டுத் தக்ஷிணத்தின் மீது படையெடுத்துச் சென்று பல இராஜ்யங்களைக் கைப்பற்றினர். வங்காளத்தில் இருந்த போர்த்துக்கீஸியர், இந்துக்களையும் முஸ்லிம்களையும் கொடுமையாக நடத்தியதைக் கேள்விப்பட்டு அங்குச்சென்று அவர்களை அடக்கினர்.

ஷாஜஹான் **மும்தாஜ்மஹால்** என்னும் பெண்ணை மணந்து கொண்டார். மும்தாஜ்மஹால் மிகுந்த அழகுள்ளவர்; நற்குணமுள்ளவர்; அவர்மீது ஷாஜஹான் மிகுந்த அன்புகொண்டிருந்தார்.



தாஜ்மஹால்

மும்தாஜ்மஹால் இறந்தபின் அவருடைய ஞாபகார்த்தமாக ஷாஜஹான் **ஆக்ரா** நகரில் **தாஜ்மஹால்** என்ற சிறந்த கட்டிடத்தைக் கட்டினார். அதைப் போல் அழகான கட்டிடம் உலகிலேயே கிடையாது. அது உலகத்திலுள்ள ஒன்பது அதிசய வஸ்துக்க்ளில் ஒன்று. அது சலவைக் கற்களால் கட்டப்பட்டது. அதைக் கட்டி முடிக்கச் சுமார் 20 ஆயிரம் ஆட்கள் இருபது வருஷங்கள் வேலை செய்தார்கள். தாஜ்மஹாலை நிலா வெளிச்சத்தில் பார்ப்பவர்கள் அதன் அழகைக் கண்டு அப்படியே பிரமித்து விடுவார்கள்.

ஷாஜஹான் வேறு பல அழகிய கட்டிடங்களை யும் கட்டியிருக்கிறார். அவைகளில் **ஜும்மா மஸ்ஜிதும், முத்து மஸ்ஜிதும்** முக்கியமானவை. அவர் மிக அழகான ஒரு மயிலாசனத்தையும் செய்தார். அதில் அபூர்வமான இரத்தினங்கள் பதிக்கப்பெற்றிருந்தன. அதைப் பல அரசர்கள் கைப்பற்றினார்கள். இது பலபேர் கைமாறி இப்போது இங்கிலாந்தி லுள்ள பொருட் காட்சிச் சாலையில் இருக்கிறது.

ஷாஜஹானுக்கு நான்கு புத்திரர்கள் உண்டு. அவர்களுள் **ஔரங்கசீப்** என்பவர் மிகுந்த தந்திர சாலி. அவர் தமது சகோதரர்களைக் கொன்று விட்டு இராஜ்யத்தைக் கைப்பற்றினார். தமது தந்தையாகிய ஷாஜஹானையும் சிறையில் அடைத்தார். ஷாஜஹான் ஏழு வருஷ காலம் சிறையில் இருந்து பிறகு இறந்துபோனார்.

கேள்விகள்

1. ஷாஜஹான் என்பவர் யாருடைய புதல்வர் ?
2. அவர் கட்டிய கட்டிடங்கள் யாவை ?
3. தாஜ்மஹாலைப் பற்றித் தெரிந்ததைக் கூறு.
4. மயிலாசனத்தைப்பற்றி நீ அறிந்தது யாது ?

---

14. ராபர்ட் கிளைவ்

ராபர்ட் கிளைவ் இங்கிலாந்தில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தவர். அவர் பள்ளிக்கூடம் போவதில்லை. போனாலும் அவர் படிப்பில் கவனம் செலுத்தாமல் குறும்புகள் செய்வார். அவருடைய தந்தை அவரை எங்கேயாவது வெளிநாட்டிற்கு அனுப்பிவிட வேண்டும் என்று எண்ணினார்.

அப்போது இங்கிலாந்தில் ஆங்கிலேயர் கிழக்கிந்திய கம்பெனியை ஸ்தாபித்து, இந்தியாவில் வர்த்தகம் செய்து வந்தனர். அக்கம்பெனியில் ராபர்ட் கிளை



ராபர்ட் கிளைவ்

வுக்கு அவரது தகப்பனர் ஒரு குமாஸ்தா உத்தியோகம் வாங்கிக் கொடுத்தார். கிளைவ் அந்த உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டு, சென்னைப் பட்டணத்திற்கு வந்து சேர்ந்தார்.

அக்காலத்தில் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் போர் நடந்து

கொண்டிருந்தது. அதனால் இந்தியாவிலும் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியாருக்கும், பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியாருக்கும் பகை உண்டாயிற்று. **சந்தா சாஹிப்** என்பவர் கர்நாடக இராஜ்யத்திற்கு நவாப் ஆக விரும்பிப் புதுச்சேரியிலிருந்த பிரெஞ்சுக்காரரைத் தமக்கு உதவி செய்யும்படி



ஆற்காட்டுக் கோட்டை வாயில்

வேண்டிக் கொண்டார். பிரெஞ்சு கவர்னரான **டூப்ளே** அவருக்கு உதவியாக ஒரு சேனையை அனுப்பி அவரைக் கர்நாடகத்திற்கு நவாப் ஆக்கினார்.

இச்சமயத்தில் கர்நாடகத்தில் ஆண்ட பழைய அரசரின் புத்திரரான **முகம்மதாலி** என்பவர் திருச்சிராப்பள்ளியில் இருந்தார். சந்தாசாகிப் அவரை ஒழித்துவிட எண்ணி, ஒரு பெரிய சேனையோடு வந்து திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டார். ஆங்கிலேயர் முகம்மதாலியை ஆதரித்து அவரைக்

காப்பாற்ற ஒரு சேனையை அனுப்பினார்கள். அந்தச் சேனையில் கிளைவ் ஒரு போர்வீரராயிருந்தார். அவர் தமது தளகர்த்தரை நோக்கி, "இப்போது நாம் சந்தாசாகிபின் தலைநகரமாகிய ஆற்காட்டைத் தாக்கினால், சந்தாசாகிப் திருச்சிராப்பள்ளி முற்றுகையை விட்டுவிட்டு ஆற்காட்டைக் காப்பாற்றச் செல்வார். அதனால் முகம்மதாலி தப்பித்துக் கொள்வார்" என்று யோசனை சொன்னார். தளகர்த்தரும் அவருடைய தந்திரமான யோசனைக்கு மெச்சி, அவருடைய தலைமையின் கீழ் ஒரு சேனையை ஆற்காட்டுக்கு அனுப்பினார். சந்தாசாகிபின் சேனை முழுவதும் திருச்சிராப்பள்ளி முற்றுகையில் ஈடுபட்டிருந்ததால், ஆற்காட்டில் பெரிய சேனை எதுவும் இல்லை. அதனால் கிளைவ் சுலபமாக ஆற்காட்டைப் பிடித்துக்கொண்டார்.

இச்செய்தியை அறிந்த சந்தாசாகிப் தம்மகன் வசம் ஒரு பெரிய சேனையை ஆற்காட்டிற்கு அனுப்பினார். அது ஆற்காட்டை முற்றுகையிட்டது. கிளைவ் ஒரு நல்ல சமயம் பார்த்து ஒருவருமறியாமல் கோட்டையிலிருந்து தம் சேனையுடன் வெளி வந்து முற்றுகையிட்டிருந்த சேனையுடன் சண்டையிட்டு, அதைத் தோற்கடித்து விட்டுத் திருச்சிராப்பள்ளியை அடைந்தார். திருச்சிராப்பள்ளியில் அவர் சந்தாசாகிபைத் தோற்கடித்துவிட்டு முகம்மதாலியைக் கர்நாடக இராஜ்யத்திற்கு நவாப் ஆக்கினார்.

பிறகு கிளைவ் இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கே அவரை எல்லோரும் அதிக மரியாதையுடன் வர

வேற்றூர்கள். இங்கிலாந்தில் அவர் சில மாதங்கள் தங்கிவிட்டு மறுபடியும் இந்தியாவிற்கு வந்தார். அச்சமயத்தில் வங்காள நவாபான **சிராஜ்-உத்-தௌலா** என்பவர் தமது இராஜ்யத்தில் இருந்த ஆங்கிலேயரைக் கொடுமையாக நடத்தி வந்தார். அதனல் அவரோடு போர் செய்வதற்காகக் கிளைவ் ஒரு சேனையோடு சென்றூர். **பிளாசி** என்னுமிடத்தில் இரு கட்சியாருக்கும் போர் நடந்தது. அப்போரில் கிளைவ் வெற்றி பெற்றூர்.

பிளாசிச் சண்டைக்குப்பின் கிளைவ் இரண்டாவது தடவை இங்கிலாந்துக்குச் சென்றூர். அங்கே அவர் சில வருஷகாலம் தங்கியிருந்தார். அப்பொழுது ஆங்கிலேயருடைய நிர்வாகத்தில் பல குறைகள் ஏற்பட்டிருந்தன. அவற்றை நீக்கும் பொருட்டுக் கிழக்கிந்திய கம்பெனியின் தலைவர்கள் அவரை வங்காளத்திற்குக் கவர்னராக நியமித்து அனுப்பினர்கள். கிளைவுக்கு அக்காலத்தில் **லார்ட்** பட்டம் கொடுக்கப்பட்டது. கிளைவ் இந்தியாவுக்கு வந்து, ஆங்கிலேயரது நிர்வாக முறைகளைச் சீர்படுத்திவிட்டு இங்கிலாந்துக்குத் திரும்பினர். பிறகு கொஞ்ச காலத்திற்கெல்லாம் அவர் இறந்துபோனர். இந்தியாவில் ஆங்கிலேயரது அரசாட்சியை நிலை நிறுத்திய பெரியார்களுள் கிளைவ் முதல்வர் ஆவார்.

கேள்விகள்

1. கிளைவை அவரது தந்தை ஏன் இந்தியாவிற்கு அனுப்பினர்?
2. திருச்சிராப்பள்ளி முற்றுகையின்போது கிளைவ் கூறிய யோசனை என்ன?

3. பிளாசிச் சண்டை யாருக்கும் யாருக்கும் நடந்தது ?
4. கிளைவ் கடைசிமுறையாக இந்தியாவிற்கு வந்து என்ன செய்தார் ?

---

15. விக்டோரியா மகாராணியார்

விக்டோரியா மகாராணியார் கி.பி. 1819-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் இளமையிலேயே கல்வியில் நல்ல தேர்ச்சியடைந்தார். மிகுந்த நற்குண நல்லொழுக்கமும் அவரிடம் பொருந்தியிருந்தன.

அவர் கி. பி. 1837-இல் இங்கிலாந்துக்கு அரசியானர். பட்டம் பெற்றபோது அவருக்கு வயது பதினெட்டு. அவர் அரசியல் விஷயத்தில் அதிக கவனம் செலுத்தி வந்தார். ஜனங்களுக்கு நன்மை செய்வதையே தமது நோக்கமாகக் கொண்டிருந்தார். அதனால் ஜனங்கள் அவர்மீது அன்புகொண்டிருந்தார்கள்.

அவருடைய காலத்தில் இந்தியாவில் ஒரு பெரிய கலகம் நடந்தது. அதற்கு **இந்திய சிப்பாய்க் கலகம்** என்று பெயர். அக்காலத்திற்குமுன் இந்திய அரசாங்கம் கிழக்கு இந்திய கம்பெனியாரால் நடத்தப்பட்டு வந்தது. அக்காலத்திற்குப் பிறகு இந்திய அரசியலை ஒப்புக்கொண்டதும், கி. பி. 1858-ஆம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதியில் இந்தியாவிற்கு ஒரு சாசனம் அளித்தார். அதற்கு **மகாராணியாரின் இந்திய சாசனம்** என்று பெயர். அதன்படி மகாராணியார் இந்திய சிப்பாய்க் கலகத்தில் ஈடுபட்ட எல்லோருக்கும் மன்னிப்பு அளித்து, இந்திய மக்களுடைய மத விஷயங்

களில் அரசாங்கத்தார் தலையிடமாட்டார்கள் என்று

விக்டோரியா மகாராணியார்

கூறினர். சுதேச மன்னர்களுக்குச் சுவீகாரம் செய்து கொள்ளும் உரிமையும் அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பும் கொடுக்கப்படும் என்று தெரிவித்தார்; தகுதி வாய்ந்த இந்தியர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்படும் என்றும் அறிவித்தார்.

விக்டோரியா மகாராணியார் ஜெர்மனி தேசத்து இராஜகுமாரரான ஆல்பர்ட் என்பவரை மணந்தார். ஆல்பர்ட் மிகவும் நல்லவர். அவர் இராஜ்ய நிர்வாகத்தில் மகாராணியாருக்கு உதவி புரிந்தார். மகாராணியார் 64 வருஷ காலம் அரசு செலுத்தினர். எந்த ஆங்கில மன்னரும் அவ்வளவு நீண்டகாலம் அரசு புரிந்ததில்லை. அவர் கி. பி. 1901-ஆம் வருஷம் இறந்தார். அப்போது ஜனங்கள் மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்தார்கள்.

கேள்விகள்

1. விக்டோரியா மகாராணியார் எந்த வருஷத்தில் பிறந்தார்? எப்போது இந்தியருக்குச் சாசனம் அளித்தார்

2. விக்டோரியா மகாராணியார் தமது இந்திய சாசனத்தில் என்ன தெரிவித்தார்?
3. விக்டோரியா மகாராணியாரது கணவர் யார்?
4. அவர் நற்குணமுள்ளவர் என்பது எப்படித் தெரிகிறது?

---

16. சென்னப்பட்டணம்

சென்னப்பட்டணம் நமது சென்னை மாகாணத்திற்குத் தலைநகரமாக விளங்குகிறது. ஆதலால் அதன் சரித்திரத்தைப்பற்றி நாம் அறிய வேண்டியது மிகவும் அவசியம்.

கி. பி. 1601-ஆம் வருஷத்தில் ஆங்கிலேயர் முதன் முதல் இந்தியாவிற்கு வியாபாரம் செய்ய வந்தனர். அப்போது அவர்கள் தாம் தங்கியிருந்து வியாபாரம் செய்வதற்குரிய ஒரு நல்ல இடத்தைத் தேடினர். அவர்களுக்கு முன்னர் இந்தியாவிற்கு வியாபாரம் செய்ய வந்த போர்த்துக்கீஸியர் **சாந்தோம்** என்ற இடத்தில் தங்கியிருந்தனர்; பிரெஞ்சுக்காரர் **புதுச்சேரியில்** தங்கி இருந்தார்கள். ஆங்கிலேயர் சாந்தோமுக்கு வடக்கே இருந்த ஒரு சிறு ஊரில் தங்கத் தீர்மானித்தனர்.

அவ்வூர் **ஸ்ரீரங்க ராயர்** என்னும் ஒரு சிற்றரசருக்குச் சொந்தமாயிருந்தது. கி. பி. 1639-ல் **பிரான்ஸிஸ் டே** என்னும் ஆங்கிலேயர் அதை அவரிடமிருந்து விலைக்கு வாங்கினார். அதை விற்கும்போது ஸ்ரீரங்க ராயர் அதைத் தம் தந்தையின் பெயரால் அழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவருடைய தந்தையின் பெயர் **சென்னப்பன்** என்பது. அதனால் அவ்வூருக்குச் **சென்னப்பன் பட்டணம்**

என்று பெயரிடப்பட்டது. அப்பெயர் நாளடைவில் மாறிச் சென்னப் பட்டணம் என்றும், சென்னை என்றும் வழங்கலாயிற்று.

ஆங்கிலேயர் சென்னையில் ஒரு சிறு கோட்டையைக் கட்டினார்கள். அதற்கு ஸெயிண்ட் ஜார்ஜ் கோட்டை என்று பெயர். அக்கோட்டையின் பாதுகாப்புக்காக அவர்கள் ஒரு சிறு சேனையையும்



ஸெயிண்ட் ஜார்ஜ் கோட்டை

வைத்திருந்தார்கள். ஆரம்பத்தில் சென்னைக் கவர்னர்கள் அக்கோட்டைக்குள் வசித்தார்கள். பிறகு அவர்கள் இப்போது சட்ட கலாசாலை இருக்கும் இடத்தில் வசித்து வந்தார்கள். இப்போது கவர்னர் மாளிகை வேறு இடத்தில் இருக்கிறது.

ஸெயிண்ட் ஜார்ஜ் கோட்டைக்கு வெளியே இந்திய வர்த்தகர்கள் குடியேறி வியாபாரம்

செய்து வந்தார்கள். ஆங்கிலேயர்கள் இந்த இடத்திற்குக் கறுப்பர் பட்டணம் (பிளாக் டவுன்) என்று பெயர் வைத்தார்கள். கி. பி. 1905-ம் வருஷத்தில் ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி இந்தியாவிற்கு வந்தார். அவர் அப்போது வேல்ஸ் இளவரசராக இருந்தார். அவர் தமது ஞாபகார்த்தமாகப் பிளாக் டவுனுக்கு ஜார்ஜ் டவுன் என்று பெயர் இட்டார்.

ஆங்கிலேயர் சென்னப்பட்டணத்தை ஸ்தாபித்துச் சுமார் 300 வருஷங்கள் ஆகின்றன. கி. பி. 1939-ம் ஆண்டில் சென்னையில் மூந்நூறுவது ஆண்டு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கேள்விகள்

1. நமது மாகாணத் தலைநகருக்குச் சென்னப்பட்டணம் என்னும் பெயர் எப்படி ஏற்பட்டது?
2. சென்னப்பட்டணத்தை விலைக்கு வாங்கிய ஐரோப்பியர் யார்?
3. பிளாக் டவுனுக்கு எப்படி ஜார்ஜ் டவுன் என்று பெயர் வந்தது?

---

17. செஞ்சிக்கோட்டை

திண்டிவனத்திலிருந்து திருவண்ணாமலைக்குப்போகும் வழியில் தென் ஆற்காடு ஜில்லாவில் செஞ்சி என்னும் ஊர் இருக்கிறது. அவ்வூரில் ஒரு பழைய கோட்டை உண்டு. அதற்குச் செஞ்சிக் கோட்டை என்று பெயர்.

செஞ்சிக்கோட்டை முக்கோண வடிவமாய் அமைந்திருக்கும் மூன்று குன்றுகளின்மீது இருக்

கிறது. அக் குன்றுகள் அறுபது அடி கனமுள்ள மதிலினால் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டு இருக்கின்றன. அக்குன்றுகளையும், மதிலையும் சுற்றி எண்பது அடி அகலமுள்ள அகழி ஒன்று உள்ளது. செஞ்சிக்கோட்டைக்கு இரண்டு வாயில் கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று வட புறத் தில் இருக்கிறது. அதற்கு **ஆற்காட்டு வாயில்** என்று



செஞ்சிக்கோட்டை

பெயர். மற்றொன்று கிழக்குப்பக்கம் இருக்கிறது. அதற்குப் **புதுச்சேரி வாயில்** என்று பெயர்.

சுமார் 400 வருஷங்களுக்குமுன் செஞ்சிக் கோட்டை விஜயநகர இராஜ்யத்திற்குச் சொந்த மான ஒரு முக்கிய கோட்டையாயிருந்தது. அக் கோட்டையைப் பெரும்பாலும் விஜயநகரத்தரசர் கள் கட்டினார்கள். செஞ்சி விஜயநகர இராஜ்யத் தின் ஒரு மாகாணத்திற்குத் தலைநகராயிருந்தது.

அங்கே விஜய நகர மன்னரின் பிரதிநிதி யொருவர் வசித்து வந்தார்.

விஜயநகர இராஜ்யம் அழிந்தபின் கோல்கொண்டா சுல்தானும், பீஜப்பூர் சுல்தானும் செஞ்சியைக் கைப்பற்றினர். அப்பால் **சிவாஜி** என்னும் மகாராஷ்டிர அரசர் ஒரு சூழ்ச்சி செய்து அதைக் கைப்பற்றினர். சிவாஜி பீஜப்பூர் சுல்தானுடைய நண்பர் போல நடித்துச் செஞ்சியிலிருந்த அச் சுல்தானுடைய பிரதிநிதியையும் அவரது குமாரர்களையும் பார்க்க விரும்புவதாகக் கூறினர். அவர்கள் அவரைப் பார்க்க வந்தபோது அவர்களைச் சிறைசெய்து கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டார். பிறகு ஔரங்கசிப் சக்கரவர்த்தி சிவாஜியின் இளைய குமாரரிடமிருந்து அதைக் கைப்பற்றினர். அவர் **சாருப் சிங்** என்ற ஓர் இராஜ புத்திரரை அக்கோட்டையில் தம்முடைய பிரதிநிதியாக வைத்தார்.

சாருப் சிங்கின் புதல்வர் தேசிங்குராஜன். ஆற்காட்டு நவாப் இந்தத் தேசிங்கோடு யுத்தத்திற்கு வந்தார். தேசிங்குராஜன் மிகுந்த தைரியத்தோடு யுத்தம் செய்தாராயினும் போரில் கொல்லப்பட்டார். அவருடைய மனைவி தீயில் மூழ்கி இறந்துவிட்டாள்.

கி. பி. 1750-ஆம் ஆண்டில் செஞ்சி பிரெஞ்சுக்காரர் வசமாயிற்று. கி. பி. 1761-ல் அதை ஆங்கிலேயர் கைப்பற்றினர். அப்பால் இருபது வருஷங்களுக்குப் பின் **ஐதராலி** அதைக் கைப்பற்றினர்.

பிறகு கொஞ்ச காலத்திற்கெல்லாம் ஆங்கிலேயர் அதை மீண்டும் அடைந்தனர்.

கேள்விகள்

1. செஞ்சிக் கோட்டை எங்கே இருக்கின்றது?
2. செஞ்சிக் கோட்டையைக் கட்டினவர்கள் யார்?
3. சிவாஜி அதை எவ்வாறு கைப்பற்றினர்?
4. தேசிங்குராஜன் என்பவர் யார்?

---

18. சேரன்-செங்குட்டுவன்

தென்னிந்திய இராஜ்யங்கள் மூன்றில் சேர இராஜ்யம் ஒன்ருகும். அதன் தலைநகருக்கு வஞ்சி என்று பெயர். சேர இராஜ்யத்தை ஒரு காலத்தில் நெடுஞ்சேரலாதன் என்னும் அரசர் ஆண்டு வந்தார். அவருக்குச் செங்குட்டுவன், இளங்கோ என்று இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். ஒரு நாள் அரசர் தம் குமாரருடன் சபையில் வீற்றிருக்கும் போது சோதிடர் ஒருவர் வந்தார். அவர் சேர அரசனது இரு குமாரரையும் உற்றுப் பார்த்தார். பிறகு அரசரை நோக்கி, "மகாராஜாவே உமது இரு குமாரர்களில் இளங்கோ மிகவும் கீர்த்தி பெற்று விளங்குவார்; அவரே அரசராகக் கூடும்" என்று கூறினர். அதைக் கேட்ட செங்குட்டுவன் முகம் வாடியது.

இவ்வார்த்தையைக் கேட்டவுடனே இளங்கோ கோபங் கொண்டார். அரசுரிமை அண்ணனுக்கே ஏற்றது என்று எண்ணினர். உடனே அப்போதே சபையோரை நோக்கி, 'நான் இன்றே துறவியாய் விட்டேன்; இது

சத்தியம்; என் அண்ணனே அரசாளவேண்டும்'' என்று சபதம் செய்தார். பிறகு அவர் அவ்வாறே துறவி ஆனார். அதனால் அவர் **இளங்கோ அடிகள்** என்று அழைக்கப்பட்டார். நெடுஞ்சேரலாதனுக்குப் பிறகு செங்குட்டுவன் அரசரானார்.

கண்ணகி சேரநாட்டிற்கு வந்து சுவர்க்கத்திற்குச் சென்றபடியால், அவளுக்குச் சேரன் செங்குட்டுவன் ஒரு கோவில் கட்டத் தீர்மானித்தார். அதற்காக அவர் வடக்கே இமயமலையினின்று கல் கொண்டுவந்து அதனால் கண்ணகியின் உருவச்சிலை செய்ய எண்ணினார். அதற்காக அவர் வடநாட்டிற்குப் பிரயாணமானார். **கனகன், விஜயன்** என்னும் இரு வட நாட்டு வேந்தர் தமிழ் நாட்டவரை இகழ்ந்து பேசியதாக அறிந்து, அவர்களுடன் போர்புரிந்து வென்றார். பிறகு இமயமலைக்குச் சென்று கல்லை வெட்டி, அதைக் கனக விஜயர்களது தலையில் சுமத்திக் கொணர்ந்தார். அப்பால் விதிப்படி அக்கல்லைக் குளிப்பாட்டி அதைக்கொண்டு கண்ணகியின் உருவச் சிலை செய்து, தமது வஞ்சிமாநகரில் ஒரு . கோயிலைக் கட்டி அச்சிலையை அதில் பிரதிஷ்டை செய்தார்.

அக்காலத்தில் இலங்கை அரசராயிருந்த **கஜபாஹு** என்பவர் கண்ணகியின் வரலாற்றையும், சேரன் செக்குட்டுவனது செயலையும் கண்டு செங்குட்டுவனோடு சிநேகம் பாராட்டித் தன்னாட்டிலும் கண்ணகிக்குக் கோவில் கட்டினார்.

சேரன் செங்குட்டுவனிடம் பெரிய கப்பற் படை ஒன்று இருந்தது. அப்படையின் உதவி

யால் அவர் அரபிக் கடலிலிருந்த சில தீவுகளைக் கைக்கொண்டார்.

செங்குட்டுவன் பல தமிழ்ப் புலவர்களை ஆதரித்தார். அவரது தம்பியாகிய **இளங்கோவடிகள்** ஒரு சிறந்த தமிழ்ப் புலவர். அவர் **சிலப்பதிகாரம்** என்னும் தமிழ் நூலை இயற்றினர். அந்நூல் இப்பொழுது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

கேள்விகள்

1. இளங்கோ துறவியானதற்குக் காரணம் என்ன ?
2. சேரன் செங்குட்டுவன் ஏன் வடநாட்டு மன்னருடன் போர் புரிந்தார் ?
3. கஜபாஹு என்பவர் யார் ? அவர் என்ன செய்தார் ?
4. இளங்கோவடிகள் இயற்றிய தமிழ் நூலின் பெயர் என்ன ?

19. முதல் குலோத்துங்கன்

கங்கைகொண்ட சோழருக்குப்பின் அவரது பெண் வழிப் பேரரான **இராஜேந்திரன்** என்பவர் சோழ நாட்டு அரசரானர். அவர் கிழக்குச் சாளுக்கிய வமிசத்தைச் சேர்ந்தவர். அழிந்த சோழ வமிசம் அவரால் நிலைபெற்றதால் **குலோத்துங்கன்** என்ற பட்டம் அவருக்கு ஏற்பட்டது. அவர் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட சோழ நாட்டை ஆண்டார். மத்திய காலத்தில் இழந்துபோன நாடுகளை அவர் மீண்டும் கைப்பற்றினர். சேர நாட்டில் அவர் பாதுகாப்புச் சேனை ஒன்றை வைத்தார்.

அக்காலத்தில் **வட கலிங்க** நாட்டை **அநந்த பதுமன்** என்னும் அரசர் ஆண்டு வந்தார். அவர் இரண்டு வருஷமாக குலோதுங்க சோழனுக்குக் கப்பம் கொடாமல் அலக்ஷியமாக இருந்தார். அதனுல் கோபங்கொண்ட குலோத்துங்கன் அவரை அடக்குவதற்காகத் தமது சேனைத் தலைவராகிய **கருணுகரத் தொண்டைமான்** என்னும் பல்லவரை அனுப்பினுர். தொண்டைமானும் அவ்வாறே சென்று அநந்த பதுமனை வென்று நாட்டைக் கீழ்ப்படுத்தினுர். இச்செய்தி **கலிங்கத்துப் பரணி** என்னும் நூலில் விவரித்துச் சொல்லப்படுகிறது.

குலோத்துங்கன் சுங்கவரியை நீக்கி வியாபாரம் பெருகச் செய்தார். இதனுல் அவருக்குச் **சுங்கம் தவிர்த்த சோழன்** என்ற ஒரு பெயரும் ஏற்பட்டது. அவர் காலத்தில் நிலங்கள் புதிதாக அளக்கப்பட்டன. விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு வரியாக ஏற்படுத்தப்பட்டது. அவர் காடுகளை அழித்து ஊர்களை ஏற்படுத்தினுர். உழவுத் தொழிலுக்கு உதவும்படி பல ஏரிகள் வெட்டினுர். அவர் 49 வருஷம் அரசாண்டார்.

குலோத்துங்க சோழன் பட்சபாதம் இல்லாமல் எல்லா மதத்தினரையும் ஆதரித்தார். ஔவையார், ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர் முதலிய புலவர்கள் அவர் காலத்தில் இருந்தார்கள்.

கேள்விகள்

1. குலோத்துங்கன் என்று அரசருக்குப் பெயர்வரக் காரணம் என்ன ?

2. கலிங்கத்துப்பரணி என்னும் நூலில் என்ன சொல்லப் பட்டிருக்கிறது?
3. குலோத்துங்கன் காலத்தில் இருந்த புலவர்கள் யாவர்?

---

20. விசுவநாத நாயக்கர்

சுமார் 500 வருஷங்களுக்கு முன் **அச்சுதராயர்** என்னும் அரசர் **விஜயநகரத்தை** ஆண்டு வந்தார். அக் காலத்தில் **சந்திர சேகர பாண்டியன்** என்னும் பாண்டிய மன்னர் மதுரையை ஆண்டார். தஞ்சாவூர் அரசராகிய வீரசேகர சோழன் போரில் சந்திர சேகர பாண்டியனை தோற்கடித்துவிட்டு மதுரையைக் கைக்கொண்டார்.

இந்தச் சோழரும் பாண்டியரும் அச்சுதராயருக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்களா யிருந்தனர். பாண்டியர் அச்சுதராயரிடம் சென்று தமது இராஜ்யத்தைத் தாம் மீண்டும் அடைவதற்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டார். அச்சுதர் அவ்வாறே தமது தளகர்த்தருள் ஒருவராகிய **நாகம நாயக்கரை** ஒரு சேனையுடன் பாண்டியருக்கு உதவியாக அனுப்பினர்.

நாகம நாயக்கர் வீரசேகர சோழனைத் தோற்கடித்துப் பாண்டிய இராஜ்யத்தை மீட்டார். ஆயினும் அவர் அதைச் சந்திரசேகரருக்குக் கொடாமல் தாமே ஆண்டு வரலானர். அதனல் பாண்டியர் மீண்டும் அச்சுதராயரை அடைந்து நாகம நாயக்கரது அடாத செயலைத் தெரிவித்தார். அதைக் கேட்ட அச்சுதராயர் மிகவும் கோபங் கொண்டு தம் சபையில் இருந்தவர்களைப்

பார்த்து, "இந்த நாகம நாயக்கரை அடக்கிச் சிறை செய்து கொண்டு வருபவர்கள் இங்கே யாராவது உண்டா?" என்று கேட்டார். சபையோர் ஒன்றும் பதில் கூருமல் இருந்தனர். அப்போது நாகம நாயக்கரின் புத்திரராகிய விசுவநாத நாயக்கர் தமது தகப்பனுரைத் தாமே கைது செய்து வருவதாகக் கூறினுர். அச்சுதராயர் அவர் வசம் ஒரு சேனையை மதுரைக்கு அனுப்பினுர்.

விசுவநாத நாயக்கர் மதுரையை அடைந்ததும் தமது தந்தைக்கு அச்சுதராயரது கட்டளையைத் தெரிவித்து அவருக்குப் பணிவதே நலம் என்று கூறினுர். நாகம நாயக்கர் அவ்வார்த்தையைக் கேட்காமல் விசுவநாத நாயக்கருடன் போர் புரிய ஆரம்பித்தார். அப்போரில் நாகம நாயக்கர் தோற்ருர். மதுரை சந்திரசேகர பாண்டியரது வசமாயிற்று. எல்லோரும் விசுவநாத நாயக்கரது இராஜ விசுவாசத்தைக் கொண்டாடினுர்கள்.

சந்திரசேகர பாண்டியர் பிறகு சிறிது காலம் பாண்டிய நாட்டை ஆண்டார். அவருக்குப் பிள்ளை இல்லாததால், அவர் விசுவநாத நாயக்கரைத் தமது பிள்ளைப் போலப் பாவித்து, அவரையே தமக்குப் பின் பாண்டிய நாட்டை ஆளும்படி நியமித்தார்.

மதுரையில் முதன் முதலாக இவ்வாறு விசுவநாத நாயக்கர் நாயக்க வமிசத்தை ஸ்தாபித்தார். இவர் தமது இராஜ்யத்தை 72 பிரிவுகளாகப்

பிரித்தார். அவற்றிற்குப் **பாளையங்கள்** என்று பெயர். அந்தப் பாளையங்களின் தலைவர்களுக்குப் **பாளையக்காரர்** என்று பெயர். இந்தப் பாளையக்காரர்கள் சிற்றரசர்போல இருந்து வந்தனர். சண்டைக் காலங்களில் இந்தப் பாளையக்காரர்கள் தங்கள் சக்திக்கேற்றவாறு சேனையைச் சேர்த்துக் கொண்டு, பெரிய அரசருக்கு வேண்டும்போது உதவி செய்யக் கடமைப் பட்டிருந்தனர்.

விசுவநாத நாயக்கர் திருச்சிராப்பள்ளியைப் பட்டணமாக்கி, அதைச் சுற்றிலும் அகழியை வெட்டி, அங்கு ஒரு கோட்டையும் கட்டினர். அக் கோட்டையின் அடையாளங்கள் இப்போதும் உள்ளன. திருச்சியில் இவர் ஓர் அரண்மனை கட்டினர். மலையைச் சுற்றி வீதிகளை உண்டாக்கி மலைக்கு மேற்குப் புறத்தில் ஒரு தெப்பக்குளத்தையும் வெட்டுவித்தார். ஸ்ரீரங்கம் கோவிலின் சில பாகங்களையும் அவர் கட்டினர். திருச்சியில் விசுவநாத நாயக்கரால் கட்டப்பட்ட அரண்மனையின் ஒரு பாகத்தில்தான் இப்போது தாலூகா கச்சேரி இருக்கிறது.

இன்னும் விசுவநாத நாயக்கர் வைகை யாற்றில் பல அணைகளைக் கட்டி நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தினர். மதுரையிலிருந்த பழைய கோட்டைகளை இடித்து விட்டுப் புதிய கோட்டைகளைக் கட்டினர். அக்காலத்தில் வழிப்பிரயாணம் செய்யும் சாலைகளில் திருடர்பயம் அதிகமாக இருந்தது. விசுவநாத நாயக்கர் நல்ல சாலைகளை உண்டாக்கித் தக்க காவல் ஏற்படுத்தித் திருடர் பயத்தைப்

போக்கினார். அவருடைய ஆளுகையில் ஜனங்கள் சந்தோஷமாக வாழ்ந்தார்கள்.

கேள்விகள்

1. சந்திரசேகர பாண்டியர் ஏன் முதல் தடவை அச்சுதராயரது உதவியை நாடினார் ?
2. இரண்டாம் தடவை சந்திரசேகர பாண்டியர் அச்சுதராயரது உதவியை நாடியது ஏன் ?
3. விசுவநாத நாயக்கர் மதுரைக்கு அரசரானது எப்படி ?
4. விசுவநாத நாயக்கர் நாட்டிற்கு என்ன நன்மை செய்தார் ?

60